பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழயல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 01 வியாழக்கிழமை 13.02.2025 கதிர் 097

## இது ரகசியம் அல்ல!

ஐக்கியதேசியக்கட்சிக்கும்ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலான பேச்சைக் குழப்புவதில் ரணில் தனது நரித் தந்திரங்களைப் பயன்படுத்துகிறார் என்பதை

2

# விகாரை அகற்றப்படும்வரை மக்களின் போராட்டம் ஓயாது

## கஜேந்திரகுமார் எம்.பி. அறிவிப்பு

தையிட்டியில் உள்ள சட்டவிரோத விகாரை அகற்றப்படும் வரையில் எமது போராட்டம் ஓயாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுத் தெரிவித்தார்.

தையிட்டியில் விகாரையை அகற்றக் கோரி பௌர்ணமி நேற்றும் இடம்பெற்ற போராட்டத்தின் நடுவே செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



2

# மின்வெட்டுப் பற்றி இன்றே தீர்மானம்

மின் வெட்டை அமுல்படுத்துவதா இல்லையா என்பது குறித்து இன்று காலையே முடிவு எடுக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் பொறியியலாளர் தம்மிக்க விமலரத்ன நேற்றுப் பிற்பகல் தெரிவித்தார்.

மின்வெட்டை தீர்மானிக்க மின்சார தேவை, வழங்கல் மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றைதுல்லியமானதகவல்களுடன் ஆய்வு செய்வது அவசியம் என்றும், நாளைய மின்சார தேவைக்கான

2

# கொழும்பு நவம் பெரஹரவில் தமிழ், முஸ்லிம் நடனங்கள்



கொழும்பு நவம் மகா பெரஹர நேற்றிரவுஇடம்பெற்றது. இதில்வரலாற்றில் முதல் தடவையாக தாய் நடனமும் சேர்க்கப்பட்டிருந்தது. அத்தோடு, வடக்கைச் சேர்ந்த தமிழர்களின் நடனங்களும் முஸ்லிம்களின்நடனங்களும்கூடச் சேர்க்கப்பட்டிருந்தன.

2

# மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தம்

## தையிட்டி போராட்டத்தில் ஈ.பி.டி.பியும் வலியுறுத்து

மக்கள் காணிகள் மக்களுக்கே சொந்தம் என்ற பதாகையுடன் தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் நேற்று ஈபிடிபியினரும்போராட்டத்தில் கலந்துகொண்டனர். கொழும்பு அரசின் ஆட்சி அதிகாரத்தில் அவர்களும் பங்காளிகளாகஇருந்தபோதே இந்த விகாரை அமைக்கப்பட்டது. எனினும் விகாரை அமைந்துள்ள காணியைத் தவிர அதைச் சுற்றியுள்ள பகுதிகளைவிடுவிக்கஇணக்கம்



2

# பதுக்கப்பட்டிருந்த 15,000 கி. கீரி சம்பா அரிசி மாட்டியது

புறக்கோட்டைப்பகுதியில் நடத்தப்பட்ட சோதனையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 15,000 கிலோகிராம் கீரிசம்பா அரிசி கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.5 கிலோ கிராம் எடையுள்ள 3,000 பொதிகள் கைப்பற்றப்பட்டு வழக்குத் தொடரப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் சிறப்புக் குழுக்களால் 40 சோதனைகள் நடத்தப் பட்டதாகவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குளியாப்பிட்டி, நாரம்மல, கிரியுல்ல, மாவதகம, பொல்கஹவெல, அலவ்வ, உஹூமியா, நாரம்மல, நிகவெரட்டிய, கோபேகனே, ஹெட்டிபொல, கல்கமுவ, அபன்பொல, தலதகம மற்றும் மஹாவ ஆகிய பகுதிகளில்இந்தசோதனைகள் நடத்தப்பட்டதாகவும்,

8

# பேருந்துகளின் மீது அக்கராயனில் தாக்கு



கிளிநொச்சி அக்கராயான் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையில் இருந்து நேற்று மாலை பணியாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்தை வழிமறித்த ஒருவர் பேருந்தின் கண்ணாடி மீது கல்லெறிந்தது அதை உடைத்ததுடன் சாரதி மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார்.

தாக்கியவர் மதுபோதையில் இருந்தார் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். அதேநபர் கிளிநொச்சியிலிருந்து அக்கராயனுக்கு வந்த மற்றொரு தனியார் பேருந்து மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால் பாதிக்கப்பட்ட இரு பேருந்துகளின் சாரதிகளும் அக்கராயன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக. கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

சந்தேகநபரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர். (316)

# சட்ட ஆட்சியைக் காப்பேன் என்ற அநுரவின் கீழ் சட்டவிரோத விகாரையைக் காப்பதில் அக்கறை

## சிறீநேசன் எம்.பி. கருத்து

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி சட்ட ஆட்சியைப் பலப்படுத்தப் போகிறார் என்று தனது கொள்கை விளக்கவுரையில்குறிப்பிட்டார். ஆனால், சட்டவிரோதமாகச்சட்டஆட்சிக்குஎதிராக, தனியார் காணியில் ஆக்கிரமிப்பு ரீதியாகக் கட்டப்பட்ட தையிட்டி விகாரையைப் பாதுகாப்பதில் பௌத்த சாசன அமைச்சரும் பொலிஸாரும் படையினரும்அக்கறையாகஉள்ளனர் எனஇலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமத்து சிறீநேசன் தெரிவித்தார்.

தையிட்டி விகாரை தொடர்பில் அவர்நேற்று வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையில் சிங்களவர் ஒருவருக்குச் சொந்தமான தனியார் காணியில் கோவிலோ தேவாலயமோ பள்ளிவாசலோ அமைப்பதற்கு இந்த ஆளும்தரப்பு கடைசி வரை அனுமதிக்காது. அவ்வாறு

8



# சீனாவுக்குக் குரங்குகளை ஏற்றத்தான் பழியெல்லாம் அவற்றில் விழுகின்றது

## முன்னாள் அமைச்சர் ராஜித தெரிவிப்பு

சீனாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அங்கு குரங்குகளை ஏற்றுமதி செய்வது தொடர்பில் பேச்சு முன்னெடுத்திருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். அதனால்தான் நாட்டிலுள்ள அனைத்துபிரச்சினைகளுக்கும் குரங்குகள்மீது பழிசுமத்தப்படுவதாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆளும்தரப்பில் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்கள் காணப்பட்டன. தற்போதைய ஜனாதிபதி

8

# இந்த ஆளும்தரப்பை வழிநடத்துவது இந்தியா, சீனா, ஜப்பான் நாடுகள்தான்

## பஷீர் சேகுதாவுத் தெரிவிப்பு

நாங்கள் வாக்களித்து ஆளும்தரப்பை தெரிவுசெய்தாலும் அதனை வழிடத்துவது இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற சர்வதேச நாடுகளாகும் என ஐக்கிய சமாதான கூட்டமைப்புகட்சியின் சிரேஷ்ட தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளமுன்னாள்அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் தேசிய மாநாடு நேற்று மருதானை குப்பியாவத்தை சனசமூக பண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு

8

காலைக்கதிர் Kalaikkathir

# என்னிடமிருந்து இழப்பீடு குறித்த விசாரணையை தொடங்குங்கள்

## முன்னாள் எம்.பி. தொலவத்த அழைப்பு

இழப்பீடுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தயவு செய்து என்னிடமிருந்து விசாரணைகளைஆரம்பியுங்கள்.அதற்கமைய குற்றம் செய்யத் தூண்டியவர்களுக்கு எதிராக எம்மால் நீதிமன்றம் செல்ல முடியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.

அவர் நேற்றுக் கொழும்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை சுங்க வரலாற்றில் பெரும் மோசடியாக 300க்கும் மேற்பட்ட கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். அதனையும், தண்ணீரில் அடங்கியுள்ள புற்றுநோய் மூலக்கூறுகள் தொடர்பான சர்ச்சையையும், நெல்லுக்கான உத்தரவாத விலை குறித்த சிக்கல்களையும் மறக்கச் செய்வதற்காக தற்போது முன்னாள் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெற்றுக்கொண்ட இழப்பீட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இழப்பீடுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக ஆளும்தரப்பு தெரிவித்துள்ளது. மகிழ்ச்சிக்குரியவிடயமாகும். தயவுசெய்துஎன்னிடமிருந்துவிசாரணைகளை ஆரம்பியுங்கள்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரப்பட்டவாறு இந்த இழப்பீடுகள் மதிப்பீடு செய்யப்பட்ட முறைமை தொடர்பில் எனக்குத் தெரியப்படுத்துங்கள். அதற்கமைய குற்றம் செய்யத்தூண்டியவர்களுக்குஎதிராகஎம்மால் நீதிமன்றம் செல்ல முடியும்.

அதற்கமைய நீதிமன்றத்தின் ஊடாக அவர்களிடமிருந்து இழப்பீட்டைப் பெற்று, அதனை மீள ஆளும்தரப்பிடம் கையளிக்கமுடியும். 25 இலட்சம் அதிகபட்ச இழப்பீடுதொடர்பிலும்தற்போது பேசப்படுகிறது. அனர்த்த முகாமைத்துவ சட்டம் என்பது இயற்கை பேரிடர்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களுக்காக நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் முறைமையாகும். எவரேனும் ஒருவரது பரம்பரை சொத்துக்களை அழிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. அவற்றை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யவும் முடியாது. எனவே அனர்த்த முகாமைத்துவ சட்டத்தைக் காண்பித்து மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

தேசிய ரீதியில் ஏற்பட்ட மின்தடைக்கு குரங்குகள் மீது பழிபோடும் ஆளும்தரப்பிடம் நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வுகளும் இல்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ள இல்லத்தை மீளப் பெறுவதற்கான சட்ட ரீதியான அதிகாரம் ஆளும்தரப்புக்கு இல்லை. எனவேதான் மக்களை கடிதம் அனுப்புமாறு கோருகின்றனர். மக்கள் உண்மையை புரிந்துகொள்ளவேண்டும் என்றார்.

# யு.எஸ்.எய்ட் பற்றிய தகவல் இயற்கையான தண்டனை

## பொது ஜன பெரமுன செயலாளர் மகிழ்ச்சி

இலங்கை உட்பட ஒன்பது நாடுகளின் ஆளும்தரப்புக்களைக் கவிழ்க்க யுஎஸ் எய்ட் (USAID) பணம் செலவழித்ததாக வெளியான தகவல், மக்களை ஏமாற்றி, பலவந்தமாகவும், மோசடியாகவும் ஆட்சியைக் கைப்பற்றியவர்களுக்கு இயற்கையான தண்டனையாகும் என்று இலங்கை பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்ல, நெலும் மாவத்தையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போராட்டங்கள், ஆட்சிகளைக் கவிழ்த்தல், பௌத்தத்தை அவமதித்தல், நாட்டின் கலாசாரத்தை அழித்தல் ஆகியவற்றிற்காக வெளிநாட்டு செல்வாக்கு மூலம் வெளிநாட்டு பணம் பெறப்படுகின்றன என்று எனக்கு கூறப்பட்டது, நான் அதைச் சொன்னபோது யாரும் அதன்னை நம்பவில்லை.

அந்தக் கூற்றுகளின் உண்மை தற்போது வெளிப்பட்டு வருகிறது, இலங்கை, பங்களாதேஷ், உக்ரைன் உள்ளிட்ட ஒன்பது நாடுகளின் ஆட்சிகளைக் கவிழ்க்க யு.எஸ். எய்ட் எனப்படும் அமைப்புகள் மூலம் 260 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற பெரும் தொகை செலவிடப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தனது அதிகாரப்பூர்வ 'யீ' கணக்கு மூலம் வெளிப்படுத்தியுள்ளார் எனவும் கூறினார்.

இலங்கையில் பாலியல் நோக்குநிலை பிரச்சினைகள் குறித்து விசாரிப்பதற்காக 7.9 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது என்று வழக்கறிஞர் சாகர காரியவசம் மேலும் தெரிவித்தார்.

## இனி இது .....

அண்மையில் தெரிவித்திருந்தேன். இதன் விளைவாக அந்தப் பேச்சுக்கள் இப்போது ஊற்றிக்கொண்டுவிட்டன. அவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. சில பிரச்சினைகளின் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் இதனை உறுதிப்படுத்திய-ள்ளார்.

எந்தவொரு கூட்டணியாக இருந்தாலும் சஜித்தை வெட்டிவிட்டுத் தானே தலைவராக வேண்டும் என்பதுதான் ரணிலின் விருப்பம். அதற்காகத்தான் அவர் சூத்துமாத்துக்களை விடுகிறார் என்கின்றன ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரங்கள். ஆனால், சஜித்தை தலைவராக்காமல் இந்தக் கூட்டணி வெற்றியளிக்காது என்பதே அவர்கள் தரப்பு நிலைப்பாடு.

"ஐக்கிய தேசிய கட்சி உட்பட கூட்டணியாக பல கட்சிகள் ஒன்றிணையும் போது அதன் தலைவராக சஜித் பிரேமதாசவே நியமிக்கப்படவேண்டும். பேச்சு இடம்பெறும்போது அதில் பேசப்படாத விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கு யாருக்கும் உரிமையில்லை. யானை சின்னத்திலோ அல்லது தொலைபேசி சின்னத்திலோ உத்தேச தேர்தல்களில் போட்டியிடாமல், புதிய சின்னத்தில் போட்டியிடப் போவதாக அவர்கள் எவ்வாறு கூறலாம்?

உண்மையில் இது ஐக்கிய தேசிய கட்சியுடனான இணைவு அல்ல. ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்கு வங்கியுமில்லை. மோசடியாளர்களுடன் அல்லது வாக்கு வங்கி அற்றவர்களுடன் இணைவதாக இதனை குழப்பிக் கொள்ள தேவையில்லை" என்று மரிக்கார் காட்டமாகத் தெரிவித்தார்.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் அரசுக் கட்சியுடன் சேரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் முயற்சி ஊற்றிக்கொண்டதைப் போலவே இங்கும் ஐதேக முயற்சி ஊற்றிக்கொண்டுவிட்டது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## விகாரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தையிட்டியில் மக்களின் காணிகளுக்குள் கட்டப்பட்ட விகாரையை அகற்றி தமது காணிகளை மீட்டுத் தருமாறு காணி உரிமையாளர்கள் எங்களிடம் கேட்டிருந்தனர்.

அதற்கமைய நாங்கள தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்துவந்திருந்தோம். இந்த விகாரை அகற்றப்படும் வரையில் நாம் ஓயாது தொடர்ந்தும் போராடுவோம்.

இங்கு சட்டங்கள், விதிமுறைகளை மீறி இந்த விகாரையை இராணுவம் கட்டி முடித்துள்ளது. ஆனாலும், இந்த விகாரை சட்டபூர்வமானது அல்ல என்பதை விகாரைக்கென்று வருகின்ற அப்பாவி சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்த விகாரை கட்டப்பட்டதாலே இங்கு புத்தர் என்ற பெயரில் நடக்கின்ற அநியாயங்களை அப்பாவி சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும். அப்போது இந்த விகாரையைத் தொடர்ந்து வைத்திருப்பதில் அர்த்தம் இல்லாமல் போகும்.

போராட்டங்கள் தொடர்ந்து பலமாக அமைகின்றபோதுதான் தீர்வை அடையலாம். இதற்கமைய பலரும் இன்றைக்கு வந்து இருந்தனர். அனைவரதும் ஆதரவினால்தான் இந்தப் போராட்டம் வெற்றியளித்து இருக்கின்றது.

இதேவேளை, இன்னுமொரு விடயத்தையும் நாங்கள் சொல்ல வேண்டியுள்ளது. அதாவது நாங்கள் இனவாதிகளோ மதவாதிகளோ அல்லர். ஆனால், இங்கே இருக்கக்கூடிய மக்களின் காணிகளை ஆக்கிரமித்து அடாத்தாக கட்டப்பட்ட விகாரையை எதிர்த்துப் போராடுகின்றோம். தமிழ் மக்களின் உரிமைக்கு எதிரான செயற்பாடுகள் எதுவானாலும் நாங்கள் எதிர்ப்போம். இன்றைய போராட்டத்தை விடவும் அடுத்த பௌர்ணமிக்கு அதிகளவில் மக்கள் திரள வேண்டும்.

மேலும் உரிமைக்கான எமது இந்தப் போராட்டம் இன்னும் இன்னும் பலமடையும். இதற்குப் பின்னால் ஒட்டுமொத்த இனமும் அணிதிரளும். மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

கட்சிபேதங்களுக்கப்பபால் ஒன்றிணைந்து வந்திருப்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக சட்டத்தின் ஆட்சியைப் பற்றிக் கதைக்கும் அரசுதான் ஆட்சியில் இருக்கின்றது.

குறிப்பாக சட்டத்தை மீறி எப்படி ஒரு பொதுமகன் கட்டடம் கட்டினால் அது உடனடியாக அகற்றப்படுகின்றதோ அதேபோன்றே சட்டவிரோத விகாரையையும் அகற்ற வேண்டும். இது அகற்றபடாவிட்டால் ஒவ்வொரு இடத்திலும் நடக்கும் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மக்களின் காணி உரிமையில் இந்த அரசு கைவைக்கின்றது என்றால் ஒவ்வொரு தமிழனின் தலையிலும் கைவைப்பதாக அமையும் - என்றார்.

## மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டதாகவும், ஆனால் அதற்கான காணி அளவீட்டுக்கு அனுமதிக்காமையால் அதனைச் செயற்படுத்த முடியாமற் போனதாகவும் ஈபிடிபியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் தெரிவித்தார். மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் கட்சியின் முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் எனவும் அவர் நேற்று அறிவித்தார்.

அவர் போராட்டத்தின் நடுவே செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

தையிட்டி விகாரை என்பது, எந்தவிதமான சட்டரீதியான அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல் எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தம் என்ற எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் திடமான சிந்தனையின் அடிப்படையில், வடக்கு கிழக்கு பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தினாலும், வனவளத் திகைoகளத்தினாலும், வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காவும் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கும் எம்மால் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

அவ்வாறான நிலையில், கடந்த ஆளும்தரப்பில் அமைச்சராகச் செயற்பட்டிருந்த எங்கள் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்த காணி உரிமையாளர்கள் தங்களின் காணி விடுவிப்பு தொடர்பான கோரிக்கையை முன்வைத்தனர். அதனடிப்படையில் சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு உடன்பாடும் எட்டப்பட்டிருந்தது.

முதற்கட்டமாக, விகாரைக்கான கட்டுமானங்கள் அமைக்கப்பட்டிருந்த சிறிய பகுதியைத் தவிர, ஏனைய காணிகளை உரிமயாளர்களிடம் கையளிப்பதற்கு சம்மந்தப்பட்ட தரப்புக்கள் இணக்கம் தெரிவித்திருந்தன.

இந்நிலையில் காணிகளை விடுவிப்பதற்கான நில அளவீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், எம்மவர்கள் சிலர் மத்தியில் காணி அளவீட்டின் நோக்கம் தொடர்பான புரிதல் இன்மை காணரமாக அளவீட்டுப் பணிகளை இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டது.

அக்காலப் பகுதியில் தொடர்ச்சியாக தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டமையினால், அந்த செயற்பாட்டை எம்மால் முழுமைப்படுத்த முடியவில்லை.

கடந்த காலங்களில் தேசிய நல்லிணக்க வழிமுறை ஊடாக எவ்வளவோ மக்கள் நலன்சார்ந்த பிரச்சனைகளை அணுகி வெற்றி கண்டிருந்தோம்.

தற்போது அதிகாரத்தில் இல்லாத நிலையில், எமது மக்களின் எதிர்பார்ப்புக்களை தீர்ப்பதற்காக அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டிய கடப்பாடு எமக்கும் இருக்கின்ற நிலையில், தையிட்டி காணி உரிமயையாளர்களின் அழைப்பை ஏற்று இன்றைய கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றோம் - என்றார்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹுணுபிட்டிய கங்காராமய விகாரையில் இருந்து இந்த 46ஆவது வருடாந்திர 'கொழும்பு நவம் மகா பெரஹெரா' புறப்பட்டு கொழும்பை ஒளிரச் செய்தது.

இந்த ஆண்டு ஊர்வலம் முந்தைய ஆண்டுகளை விட மிகவும் வண்ணமயமாகவும், துடிப்பாகவும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் கங்காராமயா கோயிலும் அதைச் சுற்றியுள்ள சாலைகளும் மக்களால் நிரம்பியிருந்தன,

களனி ரஜ மகா விஹாரையின் 'கந்துல' யானை நினைவுச்சின்ன கலசத்தை சுமந்து செல்லும் அதிர்ஷ்டத்தைப் பெற்றது, பௌத்தம், மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, நினைவுச்சின்ன கலசத்தை யானை மீது வைத்தார்.

இந்த ஆண்டு ஊர்வலத்தில் வரலாற்றில் முதல் முறையாக தாய் நடனம் இடம்பெற்றது, மேலும் இந்த நடனம் பலரின் கவனத்தையும் ஈர்த்தது. கூடுதலாக, வடக்கின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு பிராந்திய நடனக் குழுக்களும் ஒரு முஸ்லிம் கலாச்சார நடனமும் ஊர்வலத்திற்கு வண்ணம் தீட்டின.

இந்த ஆண்டு ஊர்வலத்தில் கிட்டத்தட்ட 15 யானைகள் அணிவகுத்துச் சென்றன. இந்த ஆண்டு அணிவகுப்பில் பல்வேறு மரபுகளைச் சேர்ந்த சவுக்கைகள், தீப்பந்தங்கள் மற்றும் நடனக் கூறுகள் உட்பட 50 க்கும் மேற்பட்ட அம்சங்கள் இடம்பெற்றன.

## மின்வெட்டுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னறிவிப்பை இன்று காலை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் விமலரத்ன தெரிவித்தார்.

அதன்படி, எவ்வளவு நேரம் மின்சாரம் துண்டிக்கப்படும், எந்த நேரத்திற்குள் மின்சாரம் துண்டிக்கப்படும் என்பது குறித்து இன்று காலையே முடிவு செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பெப்ரவரி 9 நாடு முழுவதும் ஏற்பட்ட மின் தடை காரணமாக, நுரைச்சோலை 'லக்விஜய' மின் உற்பத்தி நிலையத்தில் மூன்று ஜெனரேட்டர்கள் செயலிழந்ததால் ஏற்பட்ட தோராயமான 800 மெகாவாட் மின்சார இழப்பை ஈடுகட்ட, 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் தலா ஒன்றரை மணி நேரம் மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

# கடற்றொழில், நீரியல்வளத்துறை திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு அமைச்சர் வருகை

கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சரும், யாழ்மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், கடற்றொழில், நீரியல்வளத்துறை திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகத்துக்கு செவ்வாய்க்கிழமை திடீர் கண்காணிப்பு பயணம் மேற்கொண்டார்.

மேற்படி திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகரனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட அமைச்சர், முக்கிய பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.

மேற்படி திணைக்களம் ஊடாக மீனவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் முறையாக இடம்பெறுகின்றனவா, சேவைகளை வழங்குவதில் உள்ள குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எவ்வாறானவளங்கள் தேவை, மீனவர்களின் தரவுகள் என்பன பற்றி அமைச்சர் கேட்டறிந்தார்.

அத்துடன், இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும்போது கைப்பற்றப்பட்ட படகுகளின் நிலை பற்றியும் அமைச்சர் இதன்போது அவதானம் செலுத்தினார்.

அரசாங்கம் மூலம் மீனவர்களுக்கென வழங்கப்படும் நிவாரணங்களை எவ்வித தடையுமின்றி உரியவகையில் பெற்றுக்கொள்வதற்குரிய சூழ்நிலை உள்ளதா என்பது பற்றியும் அமைச்சர், அதிகாரிகளிடம் வினவினார்.



## 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் வவுனியாவில் வைத்துக் கைது

வவுனியா, தோணிக்கல் பகுதியில் 2 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் ஒருவன் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா மாவட்ட பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக்கிடைத்த இரகசிய தகவலையடுத்துவன்னிமாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சமந்த விஜசேகர அவர்களின் ஆலோசனையில், வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவர்களின் வழிநடத்தலில், வவுனியா மாவட்டகுற்றவிசாரணைப்பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சாரங்க ராஜகுரு, பொலிஸ் சார்ஜன்ட்டுகளான திசாநாயக்க, ரன்வெல, பொலிஸ் கொன்தாபிள்களான சிந்தக, விதுசன், சாரதியானதிஸாநாயக்க ஆகியோர் தலைமையில் பொலிஸ் அதிகாரிகள் சிலர் இணைந்து விசேட சுற்றிவளைப்புநடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது வவுனியா, தோணிக்கல் பகுதியில் 34 வயதுடைய இளைஞன் ஒருவன் 2 கிலோ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் இளைஞனை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (-100)

## நான்கு வலம்புரிச் சங்குகளுடன் திருகோணமலையில் மூவர் கைது

(ஹன்பர்).

திருகோணமலை இறக்கக் கண்டி பகுதியில் நான்கு கோடியே 75 லட்சம் ரூபா பெறுமதியான நான்கு வலம்புரிச் சங்குகளுடன் மூன்று சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மூவரும் குறித்த வலம்புரிச் சங்குகளை விற்பனை செய்வதற்கு முயன்ற போதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் .

வவுனியா பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரும், இறக்கக் கண்டி பகுதியைச் சேர்ந்த வயது 33 மற்றும் 39 வயதுடைய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சங்குகள் கடலில் கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் மூவரும் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் 05 லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் மூவரும் எதிர்வரும் மார்ச் மாதம் 25 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவானால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



## ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபரை இடமாற்றக்கோரி கவனவீர்ப்பு போராட்டம்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபரை இடமாற்றம் செய்யக்கோரி பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளால் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று செவ்வாய்க்கிழமை காலை பாடசாலைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபரால் பாடசாலை மாணவர்களின் கல்வி ஒழுக்கம் மற்றும் ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகள் வீழ்ச்சியடைவதுடன், நிர்வாக சீர்கேடுகள் மற்றும் நிதி மோசடிகள் என பல்வேறு முறைகேடுகள் இடம்பெறுகின்றன எனவும், பாடசாலையின் வளர்சியை சீர்குலைத்து பாடசாலை சொத்துக்களை மோசடி செய்யும் அதிபரை பாடசாலையிலிருந்து வெளியேற்றக்கோரி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பெற்றோர்கள்இணைந்துசெவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் பாடசாலை நுழைவாயிலில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தார்கள்.

குறித்த அதிபர் தொடர்பான விடயங்கள் இரு செயலாளர்களாலும் வலயகல்விப்பணிப்பாளர், செயலாளர் கல்வி அமைச்சு, பிரதிக் கல்விப்பணிப்பாளர் - தேசிய பாடசாலை, கல்வி அமைச்சு என்பவற்றிற்கு நேரிலும், தொலைபேசியிலும், கடிதம் மூலமும்தெரிவித்தும்எவ்விதநடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் பெற்றோர் அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்கள் சங்கத்தால் வைக்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய குறித்த அதிபர் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சால் விசாரணை குழு அமைக்கப்பட்டு ஆரம்ப புலனாய்வு விசாரணை தயாரிக்கப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டும் குறித்த அதிபரை வலயத்துடன் இணைத்தே விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு ஒரு விசாரணையை மாகாண கல்வி அமைச்சு மேற்கொள்ளவில்லை. அதனால் இவ் விசாரணை கண்துடைப்பாகவே நாங்கள் கருதுவதாக போராட்டக்காரர்கள் தெரிவித்திருந்தனர்.

குறித்த போராட்ட இடத்திற்கு வருகைதந்த ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் நிஷாந்தன் , தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர் இந்திக்க ஆகியோரிடம் குறித்த கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டிருந்தது. இதற்கானபிரதிகள்வடமாகாணபொதுச்சபை ஆணைக்குழு, ஆளுநர் செயலகம், ஆளுநர் குறைகேள் வலையமைப்பு, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஜனாதிபதி செயலகம் ஆகியோருக்கு குறித்த மகஜரை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

பொன்விழாவை குழப்பிய அதிபரே வெளியேறு, அழிக்காதே அழிக்காதே மாணவச்செல்வங்களின்கல்வியைஅழிக்காதே, அபிவிருத்தி கணக்கிலிருந்த 17 லட்சம்ரூபா எங்கே? மோசடியில் மூழ்கிய அரக்கனே! பாடசாலையில் இருந்து வெளியேறு? சாதிக்க துடிக்கும் மாணவச் செல்வங்களைத் தடுக்காதே? மாகாண அமைச்சே ஊழல் நிரூபிக்கப்பட்டும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அரச சொத்துக்களை ஊழல் செய்யதே? போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடதக்கது. 100







## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எவ்வளவு நெஞ்சழுத்தம்?

"மே 09 வன்முறையில் எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது. வீட்டை மறுசீரமைக்க 54 மில்லியன் ரூபாயை இழப்பீடாகப் பெற்றுக்கொண்டேன். இதில் யாருக்கு என்ன பிரச்சினை. இழப்பீடு தொகையை பற்றி பேசும் ஆளும் தரப்பினரே எமது வீடுகளுக்கு தீ வைத்தனர்" இப்படிக் எந்தவிதக் குற்றவுணர்வோ கூச்சமோ இன்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே.

மக்களின் வரிப் பணத்தைத் தனது சொந்தத் தேவைக்குப் பெற்றுக்கொண்டது குறித்தோ, கையிலிருந்த அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியது குறித்தோ அவருக்கு எந்த வருத்தமும் கழிவிரக்கமும் இல்லை.

"மே 9 வன்முறையில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவுடன்தான் அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. 150 மில்லியன் ரூபாய் செலவழித்து நான் வீட்டை அமைத்திருந்தேன். கலவரத்தின்போது எனது வீடு தீக்கிரையாக்கப்பட்டது. ஆகவே வீட்டை நிர்மாணிப்பதற்கு 54 மில்லியன் ரூபாயை இழப்பீடாக பெற்றுக் கொண்டேன்.

இழப்பீட்டு தொகை பெற்றுக் கொண்ட அரசியல்வாதிகளின் பெயர் விவரங்களை வெளியிடும் தரப்பினர்கள்தான் எமது வீடுகளுக்கு தீ வைத்தார்கள். அவர்களின் பெயர்களையும் ஆளும்தரப்புப் பகிரங்கப்படுத்தவேண்டும்'' என்கிறார் காமினி லொக்குகே.

அவரது கருத்துக்கள் மிக மிகக் கண்டிக்கப்படவேண்டியவை. அவர் கூறுவதைப்போன்று அவரது வீட்டுக்குத் தீ வைத்தவர்கள் இன்று ஆளும்தரப்பிலுள்ளவர்கள்தான் என்றால் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்களிடமிருந்துதான் அந்தப் பணத்தைப் பெற்றிருக்கவேண்டுமே தவிர, மக்களின் பணத்திலிருந்து கொள்ளையடித்திருக்கக்கூடாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் 30 ஆண்டுகாலப் போரில் கொழும்பு அரசின் படைகளால் பலரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. வான்படையின் குண்டு வீச்சுக்களாலும் எறிகணைத் தாக்குதல்களாலும் பல்குழல் பீரங்கிகளின் தாக்குதல்களாலும் அவர்களின் வீடுகள் சின்னாபின்னமாக்கப்பட்டன. பல வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டன. இவை அனைத்தையும் அதிகாரத்திலிருந்த ஆளும் தரப்புக்களே செய்தன. ஆனால் ஒவ்வொருவரின் வீட்டு மதிப்புக்கும் ஏற்ப அவர்களுக்கு ஒருபோதும் இழப்பீடு வழங்கப்பட்டதில்லை.

ஒரு கொள்கைத் திட்டத்தின் கீழ், மிகச் சொற்பமான தொகை மட்டுமே அரசிடமிருந்து வீடு சேதமடைந்தவர்களுக்கு வழங்கப்பட்டது. அதற்கும் ஒரு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கானவர்களின் வீடுகள் இப்படி அரச படைகளால் சேதமாக்கப்பட்டன. ஆனால், அதற்கான சொற்ப இழப்பீட்டைக்கூட பல ஆண்டுகள் கழித்தே பெற முடிந்தது. அப்படியிருக்கும்போது, பல கோடிகளை மிகச் சாதாரணமாக இழப்பீடு என்ற பெயரில் பெற்றுவிட்டு அதனை நியாயப்படுத்தும் துணிச்சல் காமினி போன்ற அரசியல்வாதிகளுக்கு எங்கிருந்து வந்தது?

இந்த நாட்டில் சட்டங்களும் விதிகளும் அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளும்தரப்பினருக்கு ஒன்றாகவும் பொதுமக்களுக்கு ஒன்றாகவுமா இருக்கின்றன? இது எவ்வளவு பெரிய அநியாயம்? இத்தகையவர்களை மக்கள் தேர்தலில் தோற்கடித்து அல்லது தேர்தலிலேயே நிற்கமுடியாத அளவிற்கு விரட்டியடித்ததுதான் சரியான முடிவு. இவர் போன்றவர்கள் ஆளும் தரப்பில் தொடர்ந்து இருப்பார்களானால் பெருச்சாளிகளைப் போன்று அரச பணம் அவ்வளவையும் கூடச் சூறையாடத் தயங்கமாட்டார்கள்.

# சாவகச்சேரி உதயசூரியனில் வாழ்வாதார உதவி வழங்கல்

(சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட உதயசூரியன் கிராமத்தில் உள்ள பெண் தலைமைக் குடும்பம் ஒன்றிற்கு அண்மையில் பொர்ணதேத்தம்மா அறக்கட்டளை மற்றும் வாழவைப்போம் அமைப்பு-கனடா மூலம் வாழ்வாதார உதவியாக கோழிக் கூடும்-கோழிகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பிரான்சிஸ், சாருஜன், நவம் மற்றும் ரிச்சாட் ஆகியோரின் ஐம்பதாயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் அறக்கட்டளையின் இயக்குனர் அன்ரனி அவர்களின் வழிகாட்டுதலில் ஒருங்கிணைப்பாளர் யோசப் ஊடாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் சமூகசேவகர்களான நிர்மலா, சற்குருநாதன், சுபோதினி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.





# வவுனியா வடக்கு உள்ளிட்ட மூன்று பிரிவுகளுக்கான பதில் இறப்பு விசாரணை அதிகாரி ஒருவர் நியமனம்

வவுனியா வடக்கு உள்ளிட்ட மூன்று பிரிவுகளுக்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக லா.சுரேந்திரசேகரன் வவுனியா மாவட்ட நீதிபதி முன்னிலையில் செவ்வாய்க்கிழமை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

வவுனியா பிரதேச செயலக பிரிவில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக செயற்பட்டு வந்த லா.சுரேந்திரசேகரன், தற்போது கடமையாற்றும் பகுதிக்கு மேலதிகமாக வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வெங்கலசெட்டிகுளம் ஆகிய பிரதேச செயலக பிரிவிற்கான பதில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட நிலையில், மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், வவுனியா விபுலானந்தா கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 100

# யாழ். உரும்பிராயில் தீயிட்டு எரிக்கப்பட்ட மோ.சைக்கிள்

யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை வன்முறை குழு ஒன்று தீயிட்டு எரித்துள்ளது.

இந்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

உரும்பிராய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை, வன்முறை கும்பல் தீயிட்டு எரித்துள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலை கடற்தொழிலாளர் குகதாசன் எம்.பியுடன் சந்திப்பு

(ஹஸ்பர்)

திருக்கோணமலை பத்தாம் குறிச்சி அண்ணா மீனவர் சங்கதிற்கு செவ்வாய்க்கிழமை விஜயம் ஒன்றை திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது கடலுக்கு சென்று படகுகள் காணாமல் போவதை குறைப்பதற்காக, ஆபத்து காலங்களில் தேடிப்போகும் படகுக்கான 8.5 இலட்ச ரூபாமதிப்புடைய அவசரகால மோட்டார் இயந்திரம் வெளி இணைப்பு இயந்திரம் ஒன்று இலவசமாக வழங்கப் பட்டது. இந்த எந்திரத்தை அண்ணா மீனவர் சங்கத் தலைவர் கு. வரதராஜனிடம் ஒப்படைக்கப் பட்டது. இதன் பொழுது மீனவர்கள், படகு உரிமையாளர்கள் நலன்விரும்பிகள் எனப் பலரும் இருந்தனர்.

இந்தநிகழ்வைதிருக்கோணமலைதமிழ் மீனவர்கள் நலன்புரிச் செயற்பாட்டாளர் உதயகுமார் அஜித் குமார் ஏற்பாட்டில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.





# திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக ஒருவர் வவுனியா பொலிஸாரினால் கைதானார்

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் இடம்பெற்ற இரு வேறு திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் கடந்த மாதம் வீடு ஒன்றில் இருந்து கைத்தொலைபேசி ஒன்றும் பிறிதொரு வீட்டில் இருந்து மோட்டர் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டிருந்தன.

குறித்த சம்பவம் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், அதற்கு மேலதிகமாக வவுனியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தயட்சகரின் ஆலோசனைக்கு அமைவாக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இச் சம்பவம் தொடர்பில் முருங்கன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவர் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதுதிருட்ப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் மாவட்ட குற்ற விசாரணைப் பிஜுவு பொலிஸார் தெரிவித்தனர். 100






# மீனாட்சியம்மாள் தமிழ் வித்தியாலயக் காணியை மக்கள் சட்டவிரோதமாகப் பிடித்ததற்கு எதிர்ப்பு

(இரவீந்திரன்)

நிவித்திகலை கல்வி வலயத்தின் கீழியங்கும் இஃஎந்தான மீனாட்சியம்மாள் தமிழ் வித்தியாலய காணியை பிரதேச மக்கள் சட்டவிரோதமாக கைப்பற்றி வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பாடசாலையின் பெற்றோர்கள் ,பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து செவ்வாய்க்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்று காலை முதல் மாலை வரை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர் எமது காணிக்கு உத்தரவாதம் தாருங்கள். என்று கோசம் எழுப்பியதுடன் அதனை தடுக்க பாடசாலை அதிபர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.





இது குறித்து சபரகமுவ மாகாண ஆளுநர், மாகாண கல்வி திணைக்களம்,வலயக்கல்விகாரியாலயம், வந்தான் பொலிஸ் நிலையம் உள்ளிட்ட பல நிறுவனங்களுக்கு அறிவித்ததை தொடர்ந்து நிவித்திகலை வலய கல்விகாரியாலய அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக அறிவித்ததை தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# தசாப்தத்தின் பின்னர் விளையாட்டுப் போட்டி

(இம்றான்)

2025 ஆம் ஆண்டுக்கான இல்ல விளையாட்டுப் போட்டி கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை அதிபர் திருமதி எஸ். நஸீரா நஜாத் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தின் உடற்கல்விப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் என். அரபாத் பிரதம விருத்தினராக கலந்து சிறப்பித்தார்.

சுமார் ஒரு தசாப்தத்தின் பின்பு நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டி என்பதால் மாணவர்கள் களிப்புடன் விளையாடினார்கள்.

ஹப்ஸா, ஸைனப், கதீஜா, ஆயிஷா ஆகிய நான்கு இல்லங்கள் கலந்து கொண்டன.

ஆரம்பமான முதல் உள்ளக சதுரங்க போட்டியின் ஸைனப் இல்லம் அதிக புள்ளிகளை பெற்று வெற்றி வாகை சூடியது.





# ரிஷாத் பதியுதீனுக்கும், பிரான்ஸ் நாட்டின் முக்கிய அமைப்புக்குமிடையில் சந்திப்பு



பிரான்ஸ்நாட்டினை தலைமையகமாகக் கொண்டு செயற்படுகின்ற அகதிகள் மற்றும் குடியுரிமை அற்றோருக்கான பாதுகாப்பு அலுவலக பிரதிநிதிகளுக்கும், அகில இலங்கையில் மக்கள் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கைக்குவிஜயம்மேற்கொண்டுள்ள மேற்படி அமைப்பின் பிரதிநிதிகள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். சுபைர்தீன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.



இதன்போது, இலங்கையிலிருந்து பிரான்ஸ் மற்றும் பிற நாடுகளுக்கு பயணிக்கும் அகதிகளின் நிலைமை உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் பற்றி இரு நாட்டு தரப்புக்களுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.




# முன்பள்ளி சுகாதார அபிவிருத்தி தொடர்பான அறிவூட்டல் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை அல் வசாத் பாலர் பாடசாலையில் முன்பள்ளி சுகாதார அபிவிருத்தி தொடர்பான அறிவூட்டல்நிகழ்வு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் சமூக வைத்திய நிபுணர் டாக்டர் ஹில்மி மொஹமட், எவ்வாறு ஒரு முன்பள்ளியை சுகாதார அபிவிருத்தியை நோக்கி நகர்த்துவது என விளக்கினார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பைலான் நளீம், பொது சுகாதார பரிசோதகர் எம்.தினேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சுகாதார விடயங்களைத் தெளிவுபடுத்தினர்.



அல் வசாத் பாலர் பாடசாலை நிர்வாகிகளையும், பாலர் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களையும் உள்ளடக்கியதாக நடைபெற்ற இந்த சுகாதார அபிவிருத்தி தொடர்பான அறிவூட்டல் நிகழ்வானது இந்த முன்பள்ளியை, 2025 இற்கான சிறந்த சுகாதார மேம்பாட்டு அமைப்பு முன்பள்ளியாக மாற்றுவதற்கான முன்னோடி நிகழ்வாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# அம்பாறை மாவட்டத்தில் ஒருங்கிணைப்பு கூட்டம்



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட விசேட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவர்த்தனவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பிரதி அமைச்சர் வசந்த பியத்திஸ்ஸ, கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப் தாஹிர், நாடாளுமன்ற உறுப்பினர்களான முது ரத்வத்தே, எம். எஸ்.உதுமாலெப்பை, ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர்,கோடிஸ்வரன் உட்பட பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் ஆணையாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது நிந்தவூர் பிரதேச கலாசார மண்டப நிர்மானம், வீதி அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி மற்றும் பாலம் அமைத்தல் போன்றவையும், சாய்ந்தமருது பிரதேச மையவாடி, மீனவர்களின் பிரச்சினைகள், மாவடிப்பள்ளி பாடசாலை அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் பிரச்சனைக்கான தீர்வுகள், சம்மாந்துறை பஸ் டிப்போவை மீண்டும் செயற்படுத்தல், அட்டாளைச்சேனை வீதிகள் மற்றும் வடிகால்கள் அமைத்தல், நாவிதன்வெளி மையவாடி, பொது விளையாட்டு மைதானம் புனர்நிர்மாணம் மற்றும் பெரிய நீலாவணை முஸ்லிம் பிரிவுக்கு நிரந்தர கிராம உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் போன்ற முன்மொளிவுகள் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் அவர்களினால் முன்மொழியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



மேலும் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், விளையாட்டு, மீன்பிடி, நீர்வழங்கல், பாதை அபிவிருத்தி, காணி உறுதிப்பத்திரம் வழங்கல் என பல விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவுகள் ஆராயப்பட்டதுடன் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டன.

அத்தோடு சிக்கலான விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுப் பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.




# எம் கடல் வளத்தை அழிக்கும் இந்திய மீனவரை தொப்புள்கொடி உறவுகளென அழைக்கமுடியாது

## மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேகரன் காட்டம்

இலங்கையின் கடல் வளத்தை அழிதொழிக்கும் நடவடிக்கையில் இந்திய மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும், இவ்வாறு நாசகார செயலில் ஈடுபட்டுவிட்டு செல்லும் வழியில் தொப்புள் கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயன் இல்லை எனவும் கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் இலங்கை எல்லைக்குள் அத்துமீறிச் செயற்படுவது தொடர்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் மூன்று நாட்கள் வந்தார்கள், தற்போது ஏழு நாட்களுக்கும் வருவதற்கு முற்படுகின்றார்கள். எமது நாட்டு மீன்களைப் பிடிப்பது மட்டுமல்ல கடல் வளத்தையே நாசம் செய்கின்றனர். இதனால் நாளைய தலைமுறையினருக்குரிய கடல் வளம் இல்லாமல் போகின்றது. எனவே, இலங்கை எல்லைக்குள் வந்து மீன்பிடிக்க வேண்டாம் என இந்திய மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அதற்கான உரிமை அவர்களுக்கு கிடையாது.

எமது நாட்டு கடல் எல்லைக்குள் வந்து மீன்களை பிடித்துக்கொண்டு செல்லும் வழியில் எங்களை தொப்புள்கொடி உறவுகள் எனக்கூறுவதில் பயன் இல்லை.

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதோ, தமிழக தலைவர்கள் மீதோ எமக்கு எவ்வித கோபமும் இல்லை. ஒரு சில மீனவர்கள்தான் ட்டோலர் படகுகளைப் பயன்படுத்தி, தடைசெய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்தி எமது கடல் வளத்தை நாசமாக்குகின்றனர். அதனையே நாம் எதிர்க்கின்றோம்.

எமது நாட்டு எல்லைக்குள் அத்துமீறாவிட்டால் எவரையும் கைது செய்யவேண்டிய தேவைப்பாடு எழாது. எனவே, எங்களது கடல் எல்லைக்குள் புகுந்து, கடல் வளங்களை நாசமாக்க வேண்டாம் என தமிழ்நாட்டு மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் எல்லை தாண்டாவிட்டால் எவ்வித பிரச்சினையும் எழாது – என்றார்.

## சட்ட ஆட்சியைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறுதலாக அமைத்திருந்தால், உடனடியாக அதை உடைத்து அழித்து விட்டிருப்பார்கள். இதனை சட்ட ஆட்சி என்று கூறுவர். அந்தச் சட்ட ஆட்சி தையிட்டி விகாரை விடயத்தில் செல்லுபடியாகாது.

அதேபோன்றுதான் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்துக்கு ஒரு சட்டம், ஏனைய மதத்தவர்களுக்கு ஒரு சட்டம் என்ற பாரபட்சங்கள் புதிய தேசிய மக்கள் சக்தி ஆட்சியிலும் நடைபெறுகின்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி சார்பாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவற்றை கண்டும் காணாமல் இருக்கின்றார்கள். இதுதான் கூட்டுப்பொறுப்புக் கொள்கை என்று தேசிய மக்கள் சக்தி கற்பிக்கிறது.

வடக்கு, கிழக்கு காணி அபகரிப்புகளைக் கண்டும் காணாமல் இருப்பதற்கு வடக்கு கிழக்கில் தமிழ் அரசுக் கட்சியினர் வேட்பாளர் தெரிவில் விட்ட தவறுதான் அங்கு தேசிய மக்கள் சக்தியில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணமாகும். இல்லாவிட்டால் அந்த ஆசனங்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு உரியதாக அமைந்திருக்கும்

இந்த நிலையில், வட பகுதித் தமிழ் மக்கள் உணர்ந்திருப்பார்கள். ஆளுங்கட்சியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் தமிழர்களுக்கு எதிரான எதனையும் தட்டிக்கேட்க முடியாமல் உள்ளது என்பதை. தையிட்டி விகாரை, வெடுக்குநாறி மலை, மயிலத்தமடு மாதவனை, கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் போன்ற விடயங்களையும் தேசிய மக்கள் சக்தி தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்களால் தட்டிக்கேட்க முடியாமல் உள்ளதை அறிய முடிகின்றது. எனவே தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்துவதன் மூலமாகவே தமிழர்களின் பிரச்சினைகளை தடுக்க முடியும் அல்லது குறைக்க முடியும். இதனைத் தமிழ் மக்கள் உணரும் சந்தர்ப்பத்தை தையிட்டி விகாரை உணர்த்துகிறது என்று தெரிவித்துள்ளார்.

## பதுக்கப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி செய்யப்பட்ட சம்பா அரிசியை கிலோ ஒன்றுக்கு ரூ.280க்கும், உள்ளூர் கீரி சம்பா அரிசியை கிலோ ஒன்றுக்கு ரூ.270க்கும் விற்பனை செய்த வர்த்தகர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தெரிவித்ததாவது:

சுதந்திரத்துக்குப் பின்னர் எமது நாட்டை பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுமே ஆட்சி செய்து வந்தன. இதில் தமிழ் கட்சிகள் மொழியை முன்வைத்தும் முஸ்லிம் கட்சிகள் மார்க்கத்தை சொல்லியும் அரசியல் செய்து வந்தன. ஆனால் இந்த அனைத்தையும் பின்தள்ளிவிட்டு, கடவுளே இல்லாத ஒரு கட்சி, அனைத்தையும் துடைத்தெறிந்துவிட்டு 159 ஆசனங்களை பெற்று ஆட்சி அமைத்திருக்கிறது.

ஒரு சிறிய கட்சி பிரதான இரண்டு கட்சிகளையும் தோற்கடித்துவிட்டு ஆட்சிக்கு வருவதற்குக் காரணம், பிரதான கட்சிகளின் மீது மக்கள் கொண்டிருந்த விரக்தியாகும். பாராளுமன்ற தேர்திலில் யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரு ஆசனமும் கிடைக்கவில்லை. தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களை வெற்றிகொண்டிருப்பது பெரும் விடயமாகும்.

பழைய அரசியல் கலாசாரம் அங்கு தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் தற்போதைய ஆளும்தரப்பின் நிலைமையயை இன்னும் இரண்டு மாதங்கள் செல்லும்போது தெரிந்துகொள்ள முடியுமாகும். ஏனெனில் நாங்கள் வாக்களித்து ஆளும்தரப்பை தெரிவுசெய்தாலும் அதனை வழிடத்துவது இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற சர்வதேச நாடுகளாகும். எமது நாடு அமைந்திருப்பது முக்கியமானதொரு கேந்திர முக்கியத்துவமான இடத்திலாகும். குறிப்பாக திருகோணமலை துறைமுகம் இயற்கை துறைமுகமாகும்.

எந்தப்பெரியகப்பலைவேண்டுமானாலும் அங்கு கொண்டுசெல்லலாம். அதனால் அந்ஷ்நாடுகளின் பாதுகாப்பு கருதி இந்தத் துறைமுகத்தை கைப்பற்றிக்கொள்ள இந்த நாடுகளிடத்தில் போட்டித்தன்மை இருந்து வருகிறது.

மேலும் முஸ்லிம்களுக்கான அரசியல் கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் பெரும்பான்மை ஆதரவை பெற்ற கட்சியாக அது இருந்து வந்தது. ஆனால் தற்போது அது உருவாக்கப்பட்ட நோக்கம் தெரியாமல் போய்க்கொண்டிருக்கிறது. அதனாலே தற்போது கொழும்பையும் கிழக்கு மாகாணத்தையும் இணைத்து ஐக்கிய சமாதான கூட்டணி கட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. இளைஞர்களை இலக்காகக்கொண்டே நாங்கள் செயற்பட வேண்டும்.

அத்துடன் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவமும் முஸ்லிம் சமூகத்தை உலகளாவிய ரீதியில் வெறுப்படையச் செய்ய திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகும். குண்டுகளை வெடிக்க வைத்தவர்களுக்கு குண்டு தொடர்பில் எந்த அறிவும் இல்லை என்பது அவர்களின் செயற்பாடுகளில் இருந்து புரிந்துகொள்ள முடியும். குறிப்பிட்ட ஒரு சிலர் செய்த இந்த தவறை ஒட்டுமொத்த முஸ்லிம்கள் மீதும் பழி சுமத்தப்பட்டது.

ஜனநாயக நாடான லண்டன் நகரிலும் முஸ்லிம்களின் கடைகள் தேடித் தேடி தாக்கப்பட்டன. அந்தளவுக்கு முஸ்லிம்கள் மீது வெறுப்பை தோற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் உலக அரசியல் தொடர்பில் நாங்கள் நன்கு புரிந்து செயற்பட வேண்டும் என்றார்.

## சீனாவுக்குக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திசநாயக்க சீனா சென்றபோது இது தொடர்பில் பேச்சு நடத்தியிருக்கலாம். இதன் பின்னணியில்தான் சகல பிரச்சினைகளுக்கும் குரங்குகள் மீது பழிசுமத்தப்படுகின்றதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

மின்சாரத்துக்கான கேள்வி மற்றும் விநியோகத்தில் காணப்படும் சிக்கலே இதற்கான காரணமாகும். நுரைச்சோலையில் மின் பிறப்பாக்கிகள் 3 செயலிழந்துள்ளமையால் இந்த சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் 900 மெகாவோல்ட் மின் உற்பத்தி தடைபட்டுள்ளது. அவ்வாறெனில் ஆளும்தரப்பு முதலில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வினை வழங்கவேண்டும். மின் சக்தி அமைச்சர் பொறியியலாளர் எனக் கூறுவது நகைச்சுவையாகவுள்ளது.

மின்விநியோக மார்க்கங்களின் சமநிலையற்ற தன்மை தொடர்பில் மின்சாரசபை பொறியியலாளர்களால் முன்னரே அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவரால் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. இவர்களுக்குச் சிறந்த அரசியலில் ஈடுபடமுடியும். ஆனால் அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாது. ஆட்சி நினைத்ததைப் போல அன்றி, மிகவும் கடினமாகவுள்ளதாக ஜே.வி.பியினர் குறிப்பிடுகின்றனர் என்றார்.




# புத்தளம் தம்பபன்னி விளையாட்டு மைதானம் பெற்றோர்களின் பங்களிப்புடன் புனரமைப்பு

(சியாஜ்)

புத்தளம் தம்பபன்னி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானம் பெற்றோர்களின் பங்களிப்புடன் செப்பனிடப்பட்டுள்ளது

நீண்ட நாள்களாக சேறும் சகதியுமாக காணப்பட்ட புத்தளம் ஆ்தீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தை புனரமைப்பு செய்து தருமாறு பாடசாலையின் அதிபர் எம்.டி.எம். மனாஸின் வேண்டுகோளை அடுத்து பெற்றோர்களில் ஒருவரான மன்சூர் சஹ்பானின் முயற்சியால் கொழும்பு றொட்ரிக் கழகத்தின் நிதி உதவி ஊடாக 20 லோட் பொரல் வழங்கப்பட்டதுடன் அதனை செப்பனிடும் பனியை பெற்றோர்களான கபீர் ஜவாத் மற்றும் ஆரிப் ஆகியோருடன் பொறியியலாளர் எம்.எப் றின்ஸாத் அஹமட், சர்ராஜ் லாபிர் மற்றும் ஆசிரியர் சிபாக் முன்வந்தமை விஷேட அம்சமாகும்.

மேலும் இவ் வேலைத் திட்டங்களுக்கான முழுமையான ஆதரவு வழங்கிய புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம் ஜே எம் பைசல் மற்றும் மைதான புனரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்களுக்கும் தமது பாடசாலையின் நிர்வாகத்தின் சார்பாக தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அதிபர் எம்.டி எம் மனாஸ் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# கொள்ளையடித்த 2 பவுண் நகை மீட்கப்பட்டது; சந்தேகநபர் சம்மாந்துறை பொலிஸால் கைது

(இல்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹிஜ்ரா 3 ஆம் வீதி பகுதியில் வீட்டை உடைத்து 2 பவுண் நகை மற்றும் ஒரு லட்சம் ரூபா பணம் திருடப்பட்டதாக வீட்டு உரிமையாளர் செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த முறைப்பாடுக்கு அமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது, நெசவாலை வீதி, சம்மாந்துறை 03 பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 3 கிராம் 20 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சந்தேக நபரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையின் போது, டிசவ்வாய்க்கிழமை இரவு வேளையில் ஹிஜ்ரா 3 ஆம் வீதி பகுதியில் வீட்டினை உடைத்து 2 பவுண் நகை மற்றும் ஒரு லட்சம் ரூபாய் பணம் கொள்ளையடித்தும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஐஸ் போதைப் பொருள் 3 கிராம் 20 மில்லிகிராம் மற்றும் கொள்ளையடித்த 2 பவுண் நகையையும் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினர் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த கைது நடவடிக்கை, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர் எ.ம். நிரஞ்சன், ஜிஹான் உள்ளிட்ட அதிகாரிகள் இக் கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் தவறி விழுந்து பரிதாபமாகச் சாவு

(பாறுக் ஷிஹான்)

தேங்காய் பறிக்க தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

நிந்தவூர்-8 அல்மினன் வீதியைச் சேர்ந்த 25 வயதுடைய முஹமட் அன்சார் முகமட் ஆசாத் என்ற இளைஞனே சம்பவ இடத்தில் இவ்வாறு உயிரிழந்துள்ளார். மரணமடைந்த இளைஞன் கடற்தொழில் மேற்கொள்பவர் என்பதுடன் 11 பேர் கொண்ட குடும்பத்தில் முதலாவது பிள்ளையாவார்.

நேற்று விடுமுறை தினமா கையால் தேங்காய் பறிப்பதற்கு சென்ற நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் உயரமான தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களை பறிக்கும் போது தென்னை மரத்தின் காய்ந்த ஓலையொன்றைப் பிடித்தபோது கால் வழுக்கி சுவரில் விழுந்ததில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் சடலம் நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

மேலும் குறித்த சடலத்தின் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் ஜவாஹீர் மேற்கொண்டுள்ளதுடன் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்றதாக 15 வயது சிறுவன் யாழில் கைது

யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் 10 வயது சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்ற 15 வயது மதிக்கத்தக்க சிறுவனை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மைதானம் இல்லாதபோதும் விளையாட போராடுகிறது வவுனியா விபுலானந்தா

விளையாட்டு மைதானம் இல்லாத போதும் இவ்வருடத்திற்கான விளையாட்டுப் போட்டியை வவுனியா தெற்கு கல்வி வலய பாடசாலைகளில் ஒன்றான வவுனியா விபுலானந்தா கல்லூரி ஆரம்பித்துள்ளது.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் அதற்கான ஒரு நிரந்தர மைதானம் இதுவரை இல்லை என்பது கவலைக்குரிய விடயம். மைதானத்திற்கான நிலம் ஒன்றைக் கொள்வனவு செய்ய நீண்ட நாள்களாக பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும் இது வரை அது கைகூடவில்லை.

இவ்வாறான நிலையில், கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள குறித்த பாடசாலை இவ்வாண்டுக்கான இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டியை நேற்று (புதன்கிழமை) நடத்தியது.

குறித்த மரதன் ஓட்ட நிகழ்வை பாடசாலையின் முதல்வர் திருமதி ஞானமதி மோகனதாஸ் ஆரம்பித்து வைத்தார். பாடசாலை முன்றிலில் ஆரம்பித்த மரதன் ஓட்டம் வைரவபுளியங்குளத்தை அடைந்து, அங்கிருந்து வவுனியா நகர மணிக்கூண்டு கோபுர சந்தியை சென்றடைந்து, யாழ்.வீதியூடாக சென்று பண்டார வன்னியன் சதுக்கத்தையடைந்து, அங்கிருந்து மன்னார் வீதியூடாக நெளுக்குளம் சந்தியை அடைந்து, மீள வேப்பங்குளம் ஊடாக பாடசாலை முன்றிலில் நிறைவடைந்தது.

இதில் ஆண், பெண் என 58 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றியிருந்தனர். அத்தோடு பல பாடசாலைகளில் மைதான வசதி இருந்தும் இவ்வருடத்திற்கான விளையாட்டு நிகழ்வுகளை இன்னும் ஆரம்பிக்காத நிலையில் மைதானம் இல்லாத விபுலானந்தா கல்லூரி விளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்டத்தை நிறைவு செய்துள்ளமை அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது.



மரதன் ஓட்ட நிகழ்வில் பெண்கள் பிரிவில் லதுர்சி செல்வகுமார் முதலாமிடத்தையும், வர்ணஜா தட்சணாமூர்த்தி இரண்டாம் இடத்தையும், செந்தீபி குணசேகரம் மூன்றாம் இடத்தையும், ஆண்கள் பிரிவில் கனகராஜன் கவிஷன் முதலாம் இடத்தையும், ராசகுமார் ஸ்ரீராம் இரண்டாம் இடத்தையும், பிரகாஷ் டில்ஷான் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இதன்போது மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உற்சாகமளித்தமை குறிப்பிடத்தக்கது. 100








காலைக்கதிர் Kalaikkathir

# பண்பியல்பு பத்திரிகையாளன் பாரதிக்கு சி.வி.கே. அஞ்சலி

கடந்த 09.02.2025 அன்று காலமான இராசநாயகம் பாரதியை 1980களின் நடுப்பகுதியில் அவர் முரசொலி பத்திரிகையின் உதவி ஆசிரியராக இருந்த போதிலிருந்து அறிந்தவன் நான்.

- இவ்வாறு தனது அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாணசபைத் தவைவரும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவருமான சி.வி.கே.சிவஞானம்.

அவர் அனுப்பிவைத்துள்ள அஞ்சலி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

இக்கட்டான அந்த காலத்தில் தமது ஊடகத்துறை குருவும் வழிகாட்டியுமான திருச்செல்வம் அவர்களுக்கு மிக நம்பிக்கைக்குரியவராக இருந்தார்.

அந்தக் காலத்தில் ஊடகத்துறையும் அரசியல் துறையும் பிரதான அரச சேவைத்துறையும் அச்சுறுத்தல் நிறைந்த நித்திய கண்டம் என்ற நிலையிலேயே பணியாற்றினர். அவ்வாறான சூழ்நிலையில் பாரதி திருச்செல்வத்துடன் இணைந்து தமிழ்த் தேசிய இன விடுதலைக்கான போராட்டத்தை துணிவுடன் தீவிரமாக ஆதரித்துச் செயற்பட்டவர்.

அவ்வாறான பணி நிமிர்த்தம் திருசெல்வம் அவர்களின் கோரிக்கையின் பேரில் திருகோணமலைக்கு பயணித்தபோது தாக்குதலுக்கு உள்ளாகி தமது வலது கையை இழந்தார். அப்படியிருந்தும் மன உறுதி தளராது இடது கையெழுத்தாளனாக மாறி ஊடகப் பணியைத் தொடர்ந்தார்.

இலங்கையின் பிரதான பத்திரிகைகள் பலவற்றில் ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை பெற்றவர். எல்லோராலும் மதிக்கப் பெற்ற ஆளுமையாளன், ஊடகத்துறையின் காத்திரமான வளவாளராகத் திகழ்ந்தார்.

அவரது பொறுமை, அமைதி ஆழமான தமிழினப் பற்று நன்றியுள்ளம் என்ற பண்பியல்புகளை நான் எப்போதும் வியந்து பார்த்துள்ளேன். அவற்றுள் மிக முக்கியமாக நான் கண்டது அவர் தனது வழிகாட்டியான திருச்செல்வம் அவர்களுக்கான பாராட்டு விழாவை 2019 மார்ச் மாதத்தில் கனடாவுக்குச் சென்று மூன்று வாரம் தங்கியிருந்து மலர்க்குழுவில் ஒருவராக இருந்து அந்த விழாவை நடத்தியமை அவரது நன்றி மறவாத உள்ளத்தின் உச்சம் தொட்ட செயலாகும்.

ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய நற்பண்புகள் யாவற்றையும் தன்னகத்தே கொண்ட பெருமைக்குரியவராக வாழ்ந்த பாரதி இன்னும் வாழ்ந்திருக்க வேண்டும். ஏனோ இயற்கை நியதி இறைவன் அவரை தன்னிடம் அழைத்துக் கொண்டான்.

நான் மிகவும் நேசித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் தம்பி பாரதியின் ஆன்மா இறைவனின் பாதாரவிந்தத்தில் அமைதி பெற பிரார்த்தித்து அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றுள்ளது.

## மக்கள் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்குக நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டுகோள் விடுப்பு

(றிபாஸ்)

அம்பாறை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளில் மக்கள் எதிர்நோக்கும் கல்வி, பொருளாதாரம், விவசாயம், மீன்பிடி, விளையாட்டு, சமூக சேவை மற்றும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் முன்மொழிவுகளைச் செய்து, இவ்வாறான பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் வேண்டுகோள் விடுத்தார்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை, அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரமவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் மேலும் பல கோரிக்கைகளை இங்கு முன் வைத்தார்.

நிந்தவூர் பிரதேச கலாசார மண்டப நிர்மாணம், வீதி அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, பாலம் அமைத்தல் போன்றவையும், சாய்ந்தமருது பிரதேச மையவாடி, மீனவர்களின் பிரச்சினைகள், மாவடிப்பள்ளி பாடசாலை அபிவிருத்தி, விவசாயிகளின் பிரச்சினைகள், சம்மாந்துறை பஸ் தரிப்பிடத்தை மீண்டும் செயற்படுத்தல், அட்டாளைச்சேனை வீதிகள், வடிகான்கள் அமைத்தல், நாவிதன்வெளி மையவாடி, பொது விளையாட்டு மைதான புனர்நிர்மாணம், போன்ற பல முன்மொழிவுகள் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரால் முன்மொழியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில், கிழக்கு மாகாண ஆளுநர், அம்பாறை மாவட்ட பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள், ஆணையாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.02.2025இல் வெளியிடப்பெற்றது